மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வீ. மலைக்கண்ணன் : இனிமேலாவது அப்படிச் செய்ய அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாம் பல்கலைக் கழகத்தைக் கேட்டுக்கொள்ளலாம், அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

Meeting of Inter-Media Publicity Co-ordination Committee.

*Q 274—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :—

(*a*) whether the Inter-Media Publicity Co-ordination Committee in Tamil Nadu met during June 1973 in Madras ; and

(*b*) if so, the details of the decisions taken?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ), & (இ) : பிரச்சார ஒருங்கிணைப்புக் குழுவானது (Inter-Media Publicity Co-ordination Committee) இந்திய அரசால் அமைக்கப்பட்ட ஒன்றாகும். 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நடைபெற்ற அதன் கூட்டத்தில் இந்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள்பற்றிச் செவ்விய முறையில் பிரச்சாரம் செய்ய வேண்டிய தேவை குறித்து விவாதிக்கப்பட்டது. ஆனால் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

சிரணிப் பணிகளுக்கான செலவு.

*வினா 275 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழகத்தில் 1972–73 ஆம் ஆண்டில் சீரணிப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ? மாவட்ட வாரியாக ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 1972–73 ம் ஆண்டில் சீரணித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 12,24,377.